Registered No. M. 329.

Vol. I. **April 1903.** **No. 12.**

THE

SUGUNA SUNDARAM.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"—குறள்.

CONTENTS.	அட்டவணை.
	பக்கம்.
1. The Study of Vernaculars (by K. V. Subramaniam) ... 266	1. சுதேச பாஷைகளைக் கற்பதினாலுண்டாகும் பயன் (கே. வி. சுப்பிரமணியம்) ... 266
2. The confutation of Doubts anent Atheism (by Ganesa Ariar) ... 272	2. சா(चा)ர்வாகரின் ஓர் சங்கையின் மறுப்பு. (கணேச ஆரியர்) ... 272
3. The wonders of the world ... 279	3. பிரபஞ்ச விநோதங்கள் ... 279
4. The deceitful words (for children) 282	4. ஏமாற்றும் வார்த்தைகள் (சிறுவர்கட்கு) ... 282
5. General News 283	5. சமாசாரக் குறிப்புக்கள் ... 283
6. Index ... ... i to iv	6. அட்டவணை ... i to iv

Published by
T. S. SUBBARAMA AIYER, *Inamdhar*,
TURAIYUR.

All Rights Reserved.

Printed at the "Minerva" Press, by Thompson & Co., Broadway, Madras.

தமிழ் புத்தகங்கள்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானபோதினி (Vol. I, II, III, IV. Each)	2	8	0
2.	வர்ண வைத்திய சாஸ்திரம்	0	8	0
3.	மச்சபுராணம் (செய்யுள்)	2	8	0
4.	திருமுல்லைவாயிற்புராணம்(காலிகோகட்டடம்)	0	12	0
5.	செய்யுட்கோவை (காலிகோ பவுண்டு)	0	13	0
	,, (ஸ்டிப் போர்ட்)	0	10	0
6.	விவேக விளக்கம்	0	4	0
7.	வாசகத்திரட்டு	1	4	0
8.	நகைப்பைத்தியம் (முதற்பாகம்)	0	8	0
	,, (இரண்டாம்பாகம்)	0	8	0
9.	மரியாதைராமன் கதை, அப்பாஜிகதை	0	1	6
10.	இந்தியாவின் எதிர்கால நிலைமை (விவேகாநந்த சுவாமிகள் செய்த பிரசங்கம்)	0	1	0
11.	இந்தியா வாழ்க்கையில் வேதாந்த நிலைமை	0	1	6
12.	ரூபாவதி புதிய நாடகம்	1	0	0
	,, (ஸ்டிப்போர்ட்)	1	8	0
13	கலாவதி (காலிகோபவுண்டு)	1	12	0
14.	ஸ்ரீ கிருஷ்ண நாடகாலங்காரம்	0	12	0
15.	கலிங்கத்துப் பரணி	0	8	0
16.	நளவெண்பா (மூலம்)	0	4	0
17.	சரசாங்கி	1	0	0
18.	பஞ்சதந்திர வசனம்	0	4	0
19.	ஔவை குறள் மூலம்	0	2	0
20.	மணியசிவனார் சரித்திரம்	0	2	0
21.	மறைசையந்தாதி யுரை	0	5	0
22.	தற்காப்பு நியமம்	0	1	0
23.	நாடகவியலுரை	0	8	0
24.	சித்தாந்தப் பிரகாசிகை	0	2	0
25.	சுகுணசுகேசர்	0	12	0
26.	லீலாவதி சுலோசனை (Cloth)	1	0	0
	(Paper)	0	12	0
27.	சூளாமணி வசனம்	0	12	0
28.	பட்டணத்தார் பாடல் மூலம்	0	4	0
29.	பட்டணத்தார் பாடலுரை	1	12	0

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

தாம்ஸன் கம்பெனி,
பாபம்ஸ் பிராட்வே, சென்னை.

மச்சபுராணம். இதனால் வித்வசிரோமணிகள் அனைவர்களுக்கும் அறிவிப்பதாவது:—நம்தேயத்தின்கண் பன்னாளாய் ஒரேயிடத்தில் ஏட்டுப் பிரதியாகவேயிருந்து இரண்டொருவர்க்கே பயனடைந்துவந்ததும், புராணஸாரமுமாகிய இவ்வரிய நூலாம் "மச்சபுராணம்" பலர்க்கும் பயன் பெறுமாறு உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. 150-பக்கங்கள் கொண்டது. உயர்ந்த கலிகோ பவுண்டுசெய்து விலைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை ரூபா 2-8-0. தபாற் செலவு வேறு.

திருமுல்லைவாயிற் புராணம். இவ்வரிய நூலொன்று திருமயிலை வித்வான் ம-ள-ள-ஸ்ரீ, ஷண்முகம்பிள்ளை யவர்களால் தெள்ளிய நடையானே தமிழில் பலபாக்களாகச் செய்யப்பட்டது. நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டு உயர்ந்த பவுண்டுசெய்து விலைக்குத் தயாராயிருக்கிறது. கலிகோ பவுண்டு விலை ரூபாய் 0-12-0. பேபர் பவுண்டு 0-8-0. தபாற்செலவு வேறு.

சுகுண சுந்தரம்

The Editor reserves to himself the right of republishing separately all matrers that appear in the '*Suguna Sundaram.*'

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வால்யம் 1.] 1903ஆ ஏப்ரல்மீ. [நே. 12.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.	3	0	0
Half Yearly	,,	1	12	0
Single Copy	,,	0	5	0
Back numbers	,,	0	6	0

Foreign Subscriptions 6 *s.* Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entitle them to the discount aforesaid.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

Subscribers should not discontinue the journal in the middle of the year. Those that wish to do so, should give us notice of the same in the beginning of the year, *i.e.*, within the end of May; for otherwise one should have to pay for the whole of the current volume.

சந்தாவிவரம்.

ஆ 1-க்குதாபாற்கூலிஉள்படரூ.			3- 0-0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12-0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0- 5-0
பழயபிரதி	,,	,,	0- 6-0

இப்பத்திரிகைக்கு மேமீ முதல் சந்தாக் கணக்கு வைக்கப்படும், மே மாதத்துக்குள் சந்தாத் தொகையை முன்பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணா 8-ம், ஆறுமாதச் சந்தாவில் அணா 4-ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய்ச் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒருமாதத் தவணையுங் கொடுக்கப்படும்.

இந்தப்பத்திரிகைக்குப் பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்த யோக்யதையுடையவைகளா யிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக் கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந் தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

நன்கொடைகள் வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவறிப்போகும் நெம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்குக் கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்படமாட்டா.

பத்திரிகையை வருஷமத்தியில்நிறுத்தக்கூடாது. நிறுத்த விரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது மேமாதத்திலேயே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி தெரிவிக்காதவர்கள் அந்தவருஷ முழுவதற்குமுள்ள சந்தாவைச் செலுத்திவிடவேண்டும்.

சுதேசபாஷைகளைக் கற்பதினாலுண்டாகும் பயனும், அவைகளைக் கற்கவேண்டிய அவசியமும்.

I.

சில மாதங்களாக நமது தேசத்தில் எங்கே பார்த்தபோதிலும் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி ஜனங்கள் மிகவும் அதிகமாய்ப் பேசிவருகிறார்கள். ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சர்வகலாசாலை சீர்திருத்த சபையாரும் இவ்விஷயத்தைப்பற்றித் தங்கள் ஆலோசனைகளில் சில சமாசாரம் கூறியிருக்கின்றனர். பொதுவாய் ஜனங்களுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இந்தியாவின் எல்லாப் பாகத்தைப் பார்க்கிலும் இச்சென்னைராஜதானியில் சுதேச பாஷைகள் மிகவும் க்ஷீணதசையடைந்து இருக்கின்றனவென்பதுதான். சர்வகலாசாலைச் சபையாரும் இச்சங்கதியையறிந்து சுதேச பாஷைகள் தழைத்தோங்குவதற்கு ஏதோ சில சீர்திருத்தங்கள் செய்ய ஏற்பாடுசெய்து இருக்கின்றனர். அதுவிஷயத்தைப் பற்றிப் பின்னர் பார்த்துக்கொள்ளுவோம்.

சர்வகலாசாலைச் சங்கத்தார் தங்கள் ஆலோசனைகளை வெளியிட்ட நாள்முதல் இந்தியாவில் சாதாரணமாய் எல்லாப்பக்கங்களிலும் முக்கியமாய் நமது ராஜதானியிலும் சுதேச பாஷைகளின் அபிவிருத்தியைப் பற்றியும், அபிவிருத்தி செய்யும் முறைமைகளைப்பற்றியும், பலர் பலமாதிரி எழுதியிருக்கின்றனர். அநேக ஆங்கிலேய தினப் பத்திரிகைகளிலும் மாதாந்தரப் பத்திரிகைகளிலும் இவ்விஷயத்தைப்பற்றி பத்திராதிபரும் மற்றச் சமாசாரமெழுதுவோரும் தங்கள் தங்கள் எண்ணங்களை வெளியிட்டிருக்கின்றனர். இப்பத்திரிகை படிக்கும் கனவான்களுள்ளும் பலர் பல விடங்களில் இவ்விஷயத்தைப்பற்றி படித்தும் கேட்டும் இருந்தபோதிலும் நம்மால் முடியுமவை எழுதப்புகும் இதையும் கவனிப்பார்களென்று நம்புகிறேன். இத்தடவையில் சுதேச பாஷாபிவிர்த்தியால் உண்டாகும் பிரயோசனங்களைப்பற்றி மட்டும் பேசுவோம். ஓர் வஸ்துவின் பிரயோசனம் நமக்குத் தெரிந்தால் அந்த வஸ்துவின் அவசியம் தானேபுலப்படும். ஓர் வஸ்துவால் நமக்கு யாதொரு பிரயோசனமும் இல்லாவிட்டால் அதை விருத்திசெய்யவாவது அல்லது அதைக் காப்பாற்றவாவது நமக்கு ஆவசிகம் ஏற்படமாட்டாது: உலகத்தில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் அதனதன் பிரயோஜனத்தைப் பற்றியே சிறப்பு ஏற்படுகின்றது. அதுபோலவேதான் சுதேச பாஷைகளும், அவைகளை அபிவிருத்தி செய்வதினால் உண்டாகும் நன்மைகளும், அவைகளை நாம் ஆழ்ந்தறிந்தால் விருத்திசெய்யவேண்டிய ஆவசியகம் நமக்கு உண்டாகின்றது. தவிர இவ்வகையால் நாம் அடையக்கூடிய நன்மைகளை வேறுவழியால் அதிக வருத்தமின்றி அடையக்கூடுமானால் சுதேச பாஷாபிவிருத்தியைப்

பற்றி யோசிக்கவேண்டாம். அப்படியல்லாமல் இப்பாஷைகளை வளரச் செய்வதால் உண்டாகும் நன்மைகள் வேறு யாதொரு வகையாலும் அடையக்கூடாதானல், இப்பாஷைகளை வளரச்செய்யும் விதங்களையே நாம் கைப்பற்றவேண்டியது. இந்த விஷயங்களைப்பற்றி நம்மாலியன்ற மட்டும் பின் வரும் பக்கங்களில் ஒருவாறு கூறி முடிப்போம்.

தற்காலத்தில் எங்கேபார்த்தபோதிலும் கல்வியைப் பெருக்கச் செய்வதே ராஜாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் முக்கிய விஷயமாயிருக்கிறது. நாகரீகமடைந்த தேசத்துக்கு இன்றியமையாத லக்ஷணம் என்னவென்றால், அந்த தேசத்தில் கல்வியிற் சிறந்தவர் பலர் இருக்கவேண்டுமென்பதும், சாதாரணமாய் எல்லா ஜனங்களும் கல்விகற்க வேண்டுமென்பதுமே. நாகரீகமென்பது கல்வியென்னுங் கொடியினின்று உண்டாகிறது போலும். இதுவிஷயம் நாகரீகமடைந்ததாகச் சொல்லப்படுகிற இங்கிலாந்து, பிரான்சு முதலான தேசங்களைப்பற்றி யோசித்தால் தெரியவரும். ஒவ்வொரு தேசத்திலும் வித்தியாபிவிருத்திக்கே முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். ஏனென்றால் கற்றவர்களாலேயே இவ்வுலகம் நடத்தப்படவேண்டும்.

கற்றவர்கள் தங்கள் பிழைப்புக்குமட்டுமே வழி தேடிக்கொள்வதில்லை; கல்விகற்றபின் பலரும் போற்றும்படிக்கும், ஒருவரும் குற்றங்கூறுமல் இருக்கும்படிக்கும் பிழைக்கவேண்டியது மிகவும் ஆவசியகமே. தங்களுக்கு வேண்டியவற்றைப் பிறரைத் தொந்தரவுசெய்யாமல் தாங்களே தேடிக்கொள்ள வேண்டுமென்பதே அவர்களுடைய முக்கியமானகருத்து; வழக்கத்தில் அதிகமாய் ஒன்றும்தெரியாதவயதில் முதிர்ந்தவர் தங்கள் பிள்ளைகள் ஏதோ நாலுபணம் சம்பாதித்துப் பிழைப்பதற்கே கல்வி கற்பதாகச்சொல்லுவதுண்டு. உண்மையில் கற்றவர்களுடைய எண்ணமும் அவர்கள் செய்யவேண்டிய கருமங்களும் கேவலம் பிழைப்புடன் முடிந்துபோவதில்லை. அவ்வாறு உண்மையாய்க் கற்றவர்கள் செய்யவேண்டிய கருமங்களுள் முக்கியமானது தம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மையே. கற்றவர்கள் தேசத்தைப்பற்றியும், நிலத்தைப்பற்றியும், காலத்தைப்பற்றியும், சாஸ்திரங்களைப் பற்றியும் மிகவும் அறிந்து இருக்கிறார்கள். உதாரணமாக: தற்காலத்தில் ஆங்கிலேய பாஷைப் பரீக்ஷைகளில் பட்டம்பெற்ற கனவான்களுக்கு இவ்விஷயங்கள் மிகவும் அதிகமாகத் தெரிந்து இருக்கிறது. இவ்வாறு கற்றவர்கள் தாங்கள்வாசித்த சாஸ்திரங்களில் உள்ள உண்மைகளையும் சரித்திரங்களில் உள்ள விருத்தாந்தங்களையும் அறிந்திருப்பதல்லாமல் அப்புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கும் பெரியோர்களது வழிகளையும் சிறியோர்களது அனுபவங்களையும் எளிதில் அறிந்து அவைகட்குத் தக்கபடி தங்கள் நடக்கையை மாற்றிக்கொள்ளுகிறார்கள். நன்னெறியில் ஒழுகும்பெரி

யோர்கள் தாங்கள் கற்ற உண்மைகளைப் பலருக்கு வெளியிடவேண்டியது. அவர்களது கடமையல்லவா? இவ்விதநல்லெண்ணமுள்ள பெரியோர் தாம் எந்ததேயத்தில் வசிக்கிறார்களோ அந்ததேசத்திலோ அல்லது அந்த மாகாணத்திலோ உள்ளஜனங்கள் முக்கியமாய்த் தாம்சொன்னதையா வது அறியும்படி பொதுவானபாஷயில் பயின்று இருக்கவேண்டும். அவ்வாறு பயின்றிருவிட்டால் தாம் ஆங்கிலேயம் பிரன்சு, ஜர்மன் முதலான ஐரோப்பியபாஷைகளிலும் சமஸ்கிருதம் துலுக்கு அதாவது ஹிந்துஸ்தானிமுதலான கீழ்நாட்டாருடைய பாஷைகளிலும தாம்கற்றுக்கொண்டவிஷயங்களை தம்மவர்கள்முன் விவரமாய் எடுத்துச்சொல்லமுடியாது. சுதேசபாஷையில் எளிதாய்ப்பேசவும், அதைச் சிறியோர்பெரியோர் அறியும்படி எளிதாய் எழுதவும் திறமைவாய்ந்த பெரியோர்களே, தம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு மிக்க நன்மைபுரியக்கூடும். இப்பொழுது கல்விச்சாலைகளி னின்றும் பட்டம்பெறறுவரும் கனவான்கள் இக்குணம் வாய்ந்தவர்களானல் எவ்வளவுநன்மைசெய்யமுடியும்!! சுதேசபாஷையிற் சிறிது பயின்ற பி. ஏ; எம். ஏ; பட்டம் பெற்றவர்கள் நம்மவருக்குள் அநேகர் உண்டாகும்பக்ஷத்தில் சிலநாளில் ஆங்கிலேயபாஷையில் உள்ள சிறந்தகிரந்தங்கள் நம்முடையதாய்விடுமே!. இவ்விதசாமார்த்தியம் வாய்ந்தவர் பலர் நமது மத்தியில் இல்லாதகுறையால் நம்மவர்களுக்கு அநேகவித துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வேறுபாஷைகளில் கஷ்டப்பட்டு படித்தவித்தையானது அப்பாஷைதெரிந்த சிலருக்கே உபயோகப்பட்டு பலருக்கும் உபயோகப்படாமலிருக்கிறது. ஆங்கிலேயபாஷையில் வெகுத்திறமாய்ப் பேசும் அநேகர் பலரும் தெளிவாய் அறியும்படி சிறிதுபொழுது சுசேதபாஷையில் பேசச் சாமார்த்தியம் அற்றவர்களா யிருக்கின்றனர். இவ்விதக்குறை நம்மவர்களுக்குள் இருக்கிறதென்பதை சிலவருஷங்களுக்கு முன்னமேயே ஸர்-டி-முத்துசாமி ஐயர் முதலானபெரியோர்கள் அறிந்து நம்மவர்களை எச்சரித்து இருக்கிறார்கள். அப்படியும் அதிகவிருத்தி காணப்படவில்லை. இதுபற்றி நமது நாடு வரவர விருத்தியாபிவிருத்தி அடைந்தும் ஜனங்களுக்குள்ள கஷ்டங்கள் வெகுவாய் அப்படியேயிருக்கிறது.

தேசத்து ஜனங்கள் புதுமாதிரிகளுக்குத் தக்கபடி தங்கள் ஜீவனங்களை மாற்றிக்கொள்ள சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். ஐரோப்பிய ஆங்கிலேயபாஷைகளிற் றேர்ந்தவர்கள் இவர்களை முன்னுக்குக்கொண்டு வர வேண்டுமென்று முயற்சிசெய்தபோதும், ஜனங்கள் அவர்கள் கற்பிப்பதையுஞ் சரியாய் அறியாத காரணம்பற்றி அவர்களது புத்திமதியை அனுசரித்து நடப்பதில்லை. இக்காரணத்தால் தற்காலத்து ஆங்கிலேய பாஷை கற்றுப் பட்டம்பெற்றவர்களுக்கும், சாதாரண குடிகளுக்

கும் வித்தியாசம் ஏற்படுகின்றது. மனதில் பரஸ்பரம் அன்பு இல்லாமைபற்றி ஒரு சாரரது நோக்கங்களை மற்றவர் நேரே அறியக்கூடுகிறதில்லை. இதுவே இருதிரத்தாருக்கும் துன்பம் விளக்குங்காரணமாய் இருக்கிறது. இத்துன்பங்களை நாம் எவ்வாறுவிலக்கலாம்? ஜனங்கள் சாதாரணமாய் அறியக்கூடும் பாஷையில் அவர்களுடைய தேசத்தின் நிலைமையையும், அவர்கள் செய்யவேண்டிய காரியங்களையும் எடுத்துச்சொன்னால்தான் கற்றவர்களுடன் ஜனங்களும் சேர்ந்து ஒரேமனதாய் தேசத்து நன்மைக்கு வேண்டியவற்றைச் செய்யக்கூடும். அல்லது நமதுநாட்டில் இப்போது ஆங்கிலேயபாஷை வெகுவாய் மேற்சாதியார் படித்துவருவதால் எல்லாரும் அதைப்படித்து அதையே தேசபாஷையாகச் செய்துக்கொள்ளக் கூடுமானால் அப்பொழுதும் கஷ்டமில்லை. எல்லாம் ஆங்கிலேயபாஷையிலேயே நடத்திக்கொள்ளலாம். அத்தகையகாலம் வருவதற்குள் உலகம் என்னஸ்திதியில் இருக்குமோ ஒருவராலும் சொல்லமுடியாது!! ஆகவே ஜனங்கள் எல்லாரும் ஒவ்வோர் விஷயத்தைப்பற்றியும் நன்றாய் அறியவேண்டுமானால், அவ்விஷயத்தைப்பற்றி சுதேசபாஷைகளிலே அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். அக்காலம்வரும்போது தான் ஜனங்கள் தங்கள்தேசத்தின் உண்மையான ஸ்திதியையும், தங்கள்தேசத்து ஆசாரங்களின் பெருமைகளையும், குறைகளையும், தங்கள்மதத்தில் உள்ளகுற்றங்களையும், மேன்மைகளையும் அறிந்துகொள்ளுவார்கள். அக்காலம் தொடங்கித் தான் அத்தேசத்துக்கு எல்லாச்சிறப்புகளும் வந்ததாகச் சரித்திரம்முறையிடுகின்றது.

ஜனங்களுடைய உதவியில்லாமல் சுதேசாபிமானிகள் சிலர் தாங்களாக ஓர் காரியமும் செய்யமுடியாது. ஜனங்களைக் கொண்டேதான் எல்லாம் செய்யவேண்டும்; இதைப்பற்றி அதிகமாய் எழுதுவதைவிட ஓர் உதாரணம் கூறுவாம்: இங்கிலாந்தில் 19-வது நூற்றாண்டின் மத்தியில் உணவுதான்யங்களின்மேல் ஓர்வகைத்தீர்வைவிதித்து இருந்தார்கள். அதனால் தாழ்ந்தகுடிகளுக்கு மிகக்கொடுமை நேர்ந்தது. அதை ரத்துசெய்வதற்காக காப்டன் ரிச்சார்ட் கோலீடன் (Richard Coleden) என்பவரும் ஜான்ப்ரைட் (John Bright.) என்பவரும் மிகச்சிரமப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் என்னசெய்தார்கள் என்றால், ஒவ்வோரிடத்துக்கும்போய் அவ்விடத்திய ஜனங்களுக்கு அந்தச்சட்டத்தால் உண்டான கொடுமைகளை எடுத்துச்சொல்லி எல்லாரும் ஒன்றுசேர்ந்து ராஜாங்கத்தாரை அந்தச்சட்டத்தை ரத்துசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்படி செய்தார்கள். அப்படிச்செய்யவே, இராச்சியத்தின் ஒவ்வோர்பக்கத்திலிருந்தும் குடிகளின்மனு அநேகிக்குவந்தது. கடைசியில் அந்தச்சட்டமானது மேன்மக்களுக்கு(Lords)வருவாய்தருவதாயிருந்தும் தடையின்றி

ரத்து செய்யப்பட்டது. காப்டன் ரிச்சார்டு கொஸீடன் என்பவரும் அவ்ருடைய நண்பரும் ஜனங்களுடைய உதவியில்லாமல் தாங்களே ராஜாங்கத்தாரை அச்சட்டத்தை நீக்கிவிடவேண்டுமென்று வற்புறுத்தியிருந்தால் அதை நீக்கியிருக்கமுடியுமா ? ஒருக்காலும் முடியாதன்றோ! இதுநன்று, இதுதீமை, என்று காட்டுவதற்கு பெரியோர்கள் அவசியமே. அவ்வாறு அவர்கள் காட்டியபிறகு நன்மையைநாடவும் தீமையைக்கடியவும் முயற்சி செய்ய வேண்டியது ஜனங்களதுவேலை. நமதுதேசத்தார் இப்பொழுது ஆங்கிலேய பாஷை கற்பதுடன் சுதேசபாஷைகளும் கற்கவேண்டும். முற்கூறியபடி ஆங்கிலேயபாஷை முக்கியமாய் மேற்சாதியாரால்மட்டுமே படிக்கப்படுகிறது. சாதாரண ஜனங்களுக்கோ அநேகருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவர்களுக்கு வித்தியாபி விருத்திசெய்யவேண்டுமானால் அவர்கள் தங்கள் சுதேசபாஷையையாவது எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளும்படிசெய்ய அநேகநாள்செல்லும். அவர்களுக்கு நமதுதேச அரசாட்சியைப்பற்றி அணுவளவும் தெரியாது. அவர்களுக்கு இச்சங்கதிகளைப்பற்றித் தெரியச்சொல்ல வேண்டுமென்றால், அவர்களால் படித்தபோதிலும் அல்லது படிப்பதைக் கேட்டபோதிலும் அறியக்கூடிய எளிய நடையில் புஸ்தகங்கள் மேற்கண்ட விஷயங்களைப்பற்றிச் செய்யவும் எழுதவேண்டும், அவ்வாறு செய்த காலத்திலேயே நம்மவர்கள் இராஜாங்கவிஷயங்களையும், தாங்கள் அனுபவிக்கும் நன்மைகளையும், தங்களுக்குத் தேவையான மற்றவைகளையும், பிறதேசத்தார் தங்களைவிட அதிகமாய் அனுபவிக்கும் சுகங்களையும், அவர்களது மேன்மைகளையும், இன்னும் பல விஷயங்களையும் அறிந்து தேசத்தின் விருத்தியை நாடுவார்கள். அக்காலத்தில் ஆங்கிலேய பாஷையில் வல்லவர்கள் இவர்களை முன்னிட்டுக்கொண்டு இவர்களுடைய எண்ணங்களை அரசனுக்குத் தெரிவித்தால் அப்பொழுது நன்மை உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. தற்காலத்திலோ அவ்வாறின்றி ஆங்கிலேயத்தில் வல்லமை பெற்றவர்கள் சிலர், தங்கள் தேசத்துக்கு நன்மை செய்யவேண்டுமென்ற பூரணமனதுடனே கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் செய்வது இன்னதென்பதே பலருக்குத் தெரியவில்லை. இவர்களுடைய வேலைகளைப்பற்றிப் பலருக்கும் அறியக் கூறுவதே, நம்மவர்களுள் சாதாரணமாய் ஆங்கிலேயம் கற்றவர்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலை. ஜனங்கள் தேசாபிமானிகளின் சிரமத்தை அறிந்து இருதிரத்தாரும் ஒரே எண்ணத்துடன் உழைத்தால்தான் பலன் கிடைக்கும். அப்பொழுதே ராஜாங்கத்து உத்தியோஸ்தர்களும் பரிவுடனே தேசாபிமானிகளை ஆதரிப்பார்கள். இப்பொழுதோ ஆங்கிலேய உத்தியோஸ்தர்கள் இங்கிலீஷ் படிக்கும் இந்துக்களுக்குத் திருப்தியில்லை யென்றும், ஜனங்கள் கூட விரும்பாத விஷயங்களைப்பற்றி வீணில் வாதம் செய்கிறார்கள் என்றும், இன்னும் பலமாதிரியாக நமது தேசாபிமானிகளைப் பழிக்கிறார்கள்.

இவைகளெல்லாம் தீர்ந்து நன்மையடைய ஆங்லேயத்தில் கற்றவர்கள் சுதேச பாஷைகளிலும் வல்லவர்களாய் இருத்தல்வேண்டும்.

ராஜாங்க விஷயம்மட்டுமல்ல. நமது ஆசாரங்களைப்பற்றி யோசிப்போம். நாம் தற்காலத்தில் அனுசரிக்கும் ஆசாரங்களெல்லாம் சிறந்தவையென்றும், அவற்றில் யாதொரு பிழையும் இல்லையென்றும் சொல்ல முடியாது. எவ்வளவோ ஆசாரங்கள் தவிர்த்தல் வேண்டி யிருக்கிறது. அவைகளைக் களையும்படியும், மேலும் புது ஆசாரங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆசார சீர்திருத்த சபையார் (Social Reformers.) வருந்திக் கூறுகின்றனர். அவர் சிபார்சுசெய்யும் ஆசாரங்கள்நமக்கு நன்மைசெய்யப் பட்டவைகளே. அப்படியிருந்தும் அவர்களுடைய ஆலோசனைகள் வெகுவாய் அநேகருக்கு இன்னும் தெரியாமலே இருக்கிறது. ஏன்? எல்லாக்காரியமும் சுதேச பஷை மூலமாய்ச் செய்யாத தோஷமேதான், ஜனங்களுக்கு இது விஷயங்களைப்பற்றித் தெரியாமலே இருப்பதினால் அவைகள் நன்மையோ தீமையோ என்பதைப் பற்றி யோசிக்க அவர்களுக்கு அவசியமே ஏற்படுகிறதில்லை. ஜனங்கள்தீய ஆசாரங்களைக் கைவிட்டு நன்மையை நாடவேண்டு மென்றால் அவர்களது தற்கால நிலைமையைப்பற்றியும், புதுஆசாரங்களை அனுஷ்டிப்பதனால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும் விவரமாய் அவர்கள் அறியும்படி சொல்லவேண்டியது. ஆசாரசீர்த்திருத்தச் சபையார் வருஷாவருஷம் கூடிப்பேசும் விஷயங்களை ஆங்கிலேயபாஷை தெரிந்தவர்கள் எளிதில் அறிந்துகொள்ளுகிறார்கள், சுதேச பாஷைகளில் அச்சமாசாரங்களைப் பற்றி விஸ்தாரமாய் எழுதித்தெரியப்படுத்துகிறவர்களே கிடையாது. அவ்வாறு சிலபத்திராதிபர்கள் சுதேச பாஷைகளில் எழுதினபோதிலும், ஆங்கிலேயத்திலிருந்து மொழியெயர்த்து வெகுசங்கிரகமாக எழுதிவைக்கிறார்கள்.

மேலும் 'கற்றலிற் கேட்டலே நன்று' என்றபடி, மொழிபெயர்த்து எழுதினசங்கதிகளைப் படிப்பதைவிட விஷயங்களில் தேர்ச்சியடைந்தபெரியோரிடமிருந்து நேரேகேட்டால் மிக்கநன்மை பயக்குமென்பதற்குச் சந்தேகமென்ன? இவ்வாறு செய்வதற்கு ஆசார சீர்திருத்தச் சபையார் தம்மால் ஆங்கிலேயத்திலும் தேசபாஷையிலும் கற்றவர்களைச் சபையார்களாக வைத்துக் கொள்ளல்வேண்டும்.

நமது கைத்தொழில்களிலும் அப்படியே. தற்காலத்தில் க்ஷீணதசை அடைந்து இருக்கும் கைத்தொழில்களை நீராவியந்திரங்களைக்கொண்டும், மின்சாரயந்திரங்களைக் கொண்டும்பெருக்கலாம். அவ்விதம்செய்ய ஆங்கிலேயபாஷை கற்றவர்களையே உதவிக்குத்தேடல்வேண்டும். அவர்கள் யந்திரங்களைப்பற்றியும், அவைகளின் அமைப்புகளைப் பற்றியும், அவற்றில்

உள்ள ஸூக்ஷ்மங்களைப் பற்றியும் ஆங்கிலேயத்திலிருந்து நமது தேசபாஷைகளில் தெளிவாய் எழுதவேண்டும்.

மேலும்மேலும் எழுதுவதில் யாதுபயன்? எத்தேசத்திலும் அரசாட்சி விஷயமாயாவது, தேசாசார விஷயமாயாவது, கைத்தொழில்களை விருத்திசெய்யும் விஷயமாயாவது, கல்வியைச் சிறப்பாய்ப் பரவச்செய்யும் விஷயமாயாவது சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமானால், சுதேசிகளுள் சாதாரண ஜனங்களும், சீர்திருத்தம்செய்ய முன்னிற்பவர்களோடு ஒற்றுமையாய் வேலைசெய்யாவிட்டால், எவ்விதசீர்திருத்தமும் செய்வதுஅரிது. தேசத்துக்கு நன்மைசெய்யவேண்டுமென்று எண்ணுகிறவர்கள், தாங்கள் செய்ய எத்தனிக்கும் விஷயங்களைப் பலரும் அறிந்து மேற்கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறவேண்டும். அவ்வாறு செய்வதற்குச் சுதேசபாஷைகளில் வல்லவர் தேவை.

ஆகையால் நமது நாட்டுக்கு நன்மைசெய்யவேண்டுமென்று எண்ணுகிறவர்கள் சுதேசபாஷைகளை அபிவிருத்திசெய்வதினால் உண்டாகும் பயன்களைப்பார்த்து அவற்றை விருத்திசெய்யத் தக்கமுயற்சி சீக்கிரம் எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். K. V. S.

சா(ச)ர்வாகர் சங்கையின் மறுப்பு.

முன் சஞ்சிகையில் கூறியுள்ள சா(ச)ர்வாகரின் சங்கை மறுப்பைப்பற்றிக் கூறுவாம்.

நீகூறும் சைதந்யத்தைத் தவிர்த்து ஆன்மாவென்றொருவன் அந்யனே. இப்பிரபஞ்சங்கட்குக் காரணமவனேயன்றி பூதங்களல்ல. ஏனெனில் பூதங்கள் சேதனமல்லாததாற்றான் மனிதர்கள் ஓர் வஸ்துவைப் பார்க்கும்பொழுது அதைக்காரியமென்றும், அதற்கு ஓர்கர்த்தா உண்டென்றும் அறிகிறார்களேயன்றி, காரணமில்லாமல் சுபாவமுண்டாயிற்றென்றாவது, அதற்கோர் கர்த்தா யில்லையென்றாவது அறிவாரில்லை. ஆதலின், பூதங்களுக்கு மோர்காரணம் கர்த்தா உண்டென்றறியவேண்டியதேயாம். பூதங்களின் சுவபாவத்தாலேயே பிரபஞ்சங்கள் உண்டாயினவென்பது குற்றமே. ஏனெனில் பூதங்களுக்குச் சைதன்யமிருததாற்றான் ஸ்வப்னவஸ்தையில் நீகூறும் சைதன்யசக்தியே பிரபஞ்சமாக வேண்டுமென்பது அவசியமல்லவா? அப்பிரபஞ்சத்தைப் பார்ப்பதும் சைதன்ய சக்தியாகாது. கடமே தன்னைத்தான் பார்த்துக்கொள்ளாததுபோலும், நேத்திரமுதலிய புலன்கள் தங்களைத்தாங்களே (பார்த்து) அறிந்துகொள்ளாததுபோலும், பிரபஞ்சாகாரமா யிருக்கும் சைதன்யசக்தியும் தன்னைத்தானே பார்த்துக்கொள்ளாதென்பதே திண்ணம். அவ்வி

தமே சுஷுப்தி யவஸ்தையினும் நான் ஒன்றையுங் காணவில்லை என்கி றார்களே. அப்போது காணுதெதன்பதைக் கண்டதுயார்? அவன் அச் சைதன்யசக்திக்கு அன்னியனு யிருக்கவேண்டும். இவ்விதம் சுவப்னு வஸ்தையினுலும் நீகூறும் சைதன்யசக்திக்கு அன்னியனு (யும்) கவும் ஞானமயமாயுமிருக்கும் ஆன்மாவென்றெருவனை நன்றாயறியக்கூடுமென்று முன்னமேயே யாம்கூறினேம்; ஆதலால் சைதன்யசக்தியென்று சொல் லப்படுமறிவுக்கு அன்னியனே அவ்வான்மா. இஃதிங்ஙனம் நிற்க, சைதன்யமென்று கூறப்படும் அறிவு ஒன்றே என்பது எங்கனம்பொருந் தும்? அச்சைதன்ய சக்தியையும் தேகாகாரமாய்ப் பரிணமித்த நான்கு பூதங்கள் எங்ஙனமுண்டாகும்? அப்படி யுண்டாக்கும் சுபாவம் பூதங்க ளுக் கிருக்கிறதென்று கூறுவதும் குற்றமாகும். தனியே ஒவவொரு சுவபாவத்திலும் இல்லாதசுவபாவம் சேர்க்கையினுல்வருமா? கற்கண்டை யும் தேனையும் பழத்தையும் (சேர்) நீரையும் சேர்த்து உண்டால் அவை களுக்கு சுவபாவமான மதுரரசம்போய் கசப்புண்டாவதை யாம் அனுப வித்திருக்கிறேமா? எள்விதைக்கக் கொள்முளைப்பதைப் பார்த்தவர்க ளுண்டா? இனிப்பூதங்கள் ஸ்தூலங்களாயின் சைதன்யமுண்டாகா? சூக்ஷ்மங்களாயிருந்து பிறகு தேகாகாரமான பரிணுமவசத்தால் அப்பூ தங்களிலிருந்து சைதன்யமுண்டாகு மென்பதும் குற்றமே. ஏனெனில் ஸ்தூலபூதங்கள் சூக்ஷ்மங்களாகும் பொழுது சுவபாவங்களும் மாறுமா? நான்குபூதங்களின் சைதந்யசக்தியென்று எவராவது அனுபவிக்கிறுரா? மண்குட மென்றும், பொன்குட மென்றும், பித்தளைக்குட மென்றும் அனுபவிக்கிறதுபோல பூதசைதந்யமென் றனுபவிப்பாருண்டா? ஆத லின் எங்கும் நிறைந்து ஞானவடிவமாயும் ஸ்வப்ரகாசமாயு மிருக்கும் ஆன்மப்பொருளினது பிரகாசம்பற்றி பிரகாசிப்பதுபோல் தோன்றுமன மென்று யாம் கூறும் பொருளேஉமது சைதந்ய சக்தி யென்பது.

பூதங்களுக்குக்குரிய சுவபாவங்கள் எப்படி யுண்டாயின? பிரத்வியி னிடம் கந்தமும், நீரில் குளிர்ச்சியும், வாயுவில் சீதஸ்பரிசமும், நெருப்பில் உஷ்ணமும் எதனல் வந்தது என்றால் அதற்கு ஸ்வபாவமே என்றல் வேண்டும். அஃதன்றி விடையில்லை. அது மிகக்குற்றம். ஏனெனில், ஸ்வபாவத்திற்கு ஸ்வபாவமே காரணமாகுமா? கடத்திற்குக் காரணமாய் கடத்தையே பார்த்திருக்கிறேமா? குண்டலத்திற்குக் காரணமாய் குண் டலத்தையும், படத்திற்குக் காரணமாய்ப் படத்தையும் கூறில், அவையின் கண் ணவமானச் சம்மானமேயன்றி மற்றல்ல. ஸ்வபாவமென்ப தென்ன வென்றுல் வஸ்துவின் தன்மையென்றே கூறல் வேண்டுமல்லவா? இரும் பில் இரும்பின் ஸ்வபாவமே இருக்கவேண்டு மல்லவா? அவ்விரும்பே ரஸவீரிய (யோகத்தால்) ஸம்பந்த பரிணுமத்தால் தங்கத்தின் ஸ்வபாவத்

தைப் பெறுகின்றதே ; அஃதெப்படி ? இரும்பு தனியே யிருந்தால் தங்கமாவதில்லை. ரஸவீரிய சம்பந்தத்தால் தங்கமாகும் ஸ்வபாவதத்தையுடையதென்ருல், அது யுக்தமல்ல. இரும்பல்லாததும் மற்ற அதன் சேர்க்கைப் பொருளிலும் இல்லாததல்லாத தங்கத்தின் (இரும்பிற்குத் தங்கத்தின்) ஸ்வபாவ மங்வயபாவ மல்லவா? ஆதலால் ஸ்வபாவமென்ற ஓர் வாதம் கெட நம்மவர்க்கே அங்பபாவமென்ற வாதம் அங்கீகரித்தலாகும். குயவனைப்போல் ஸ்வபாவமே இப்பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணமென்று கூறுவதும் குற்றம்; உலகில் ஒவ்வொரு காரியத்துக்கும்(நிமித்த) சேதனமே நிமித்த காரணமாவதைக் கண்டிருக்கிறோம். அது எப்படியெனில், காரியமான கடமானது சேதனமான குயவனின் ஜெழிலில்லாவிடில் உண்டாகமாட்டாது. அப்படியே படத்திற்கும் சேதனமான சேனியனில் லாவிடில் சம்பவமுண்டா ? அசேதனங்களான பூதங்களின் சுவபாவம் எவ்விதம் பிரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமாவது ? ஆதலால் ஆன்மாவே (இ)ப்ரபஞ்சங்கட்குக்காரணமாதல் வேண்டும். பூதங்களும் அவைகளின் சுவபாவங்களும் ஆன்மபாவமில்லாததால் அக்காரணங்களாகாது. ஆன்மாவின்பாவமென்பது அதன் தன்மையும் அனுபவத்தையும் குறிக்கும். ஆத்மதத்தன்மையின்மையும், ஆத்மாநுபவ விரோதமும் பூதமும் அதன் ஸ்வபாவமும் காரணமென்ற வாதத்திற்குக் குற்றமாயேற்பட்டது.

எல்லா வஸ்துக்களிலும் ஆன்மஞான ரூபமாய்த் தோன்றுவிடினும் இரு(த்தல்)ப்பு பிரகாச சுகமென்ற மூன்று உருவத்துடன் கடமுள்ளது, குண்டலம் விளங்குகிறது, படம் இச்சிக்கப்படுமென்ற சச்சிதாநந்தமென்று மூன்றுவித வமைப்புடன் எங்கும் தோன்றுவதை யாம் எல்லாரும் அனுபவிக்கின்றனம். இனிக் குடத்தின் ஸ்வபாவ மிது, படத்தின் ஸ்வபாவம் அது, என்னு மிதுபோன்ற அனுபவங்களால் ஸ்வபாவமும் காரணமென்று எனறியக்கூடாதென்ருல் யுக்தம் ; யாம் அதையும் காரணமாய் ஒப்புக்கொண்டோமேயன்றி காரணமேயல்லவென்று கூறினோமில்லை. ஆனல் குடத்திற்கு மண்ணும் குயவனும்போல் ஆத்மா, மற்ற குயவனுடைய சிற்சில கருவிகள் நீர் முதலானதுகள்போல் ஸ்வபாவத்தையும் காலத்தையும் காரணமாய் ஒப்புக்கொள்ளுவதில் எங்களுக்கு விவாதமேஇல்லை; யாதலால் பிரபஞ்சங்களுக்கெனக்காரணம் சச்சிதானந்த வடிவமான ஆன்மாவேயன்றி மற்றதல்ல.

உலகில் எல்லாரும் ஒவ்வொருவஸ்துவையும் உளவென்று நினைக்கிறார்களேயன்றி இல்லையென்று நினைப்பவர்களில்லை. இல்லையென்று நினைக்கக் கூடிய வஸ்துக்கள் முயற்கொம்பு, ஆகாசத்தாமரை முதலான உண்மையல்லாத வஸ்துக்களேயன்றி, மற்றவைகளல்ல, ஏனெனில் இவைகளில்

வியவகார யோக்கியமான (உண்மையாயிருக்குந்தன்மை) என்று வழங்கும் 'சத்தை' என்றொன்று இராததாற்றான். இனி 'சத்தை' என்ற ஓர் தன்மையைப் பார்த்தவர்களில்லையே; அஃதை ஒப்புக்கொள்ளுவதென்றால் பொருந்தாது; நம்மவர்கள் எப்படிப்பார்க்கப்படாவிட்டாலும் சைதன்ய சக்தி என்று ஒன்றைக் கூறுகின்றார்களோ, அதுபோல் ஒவ்வுமென்பாம். நம்மவர்களே அறிவின் யதார்த்தானுபவத்தை யொப்புக்கொள்ளவேண்டியதவசியமென்று கூறினவர்களன்றோ? ஆதலால் சர்வஜனானுபவத்தால் 'சத்தை' என்பது உண்மை என்பது திண்ணம். ஓர்சிறுவன் ஒவ்வொரு வஸ்துவையும் பார்க்கும்பொழுது இவ்வஸ்து உளது என்ற அறிவால் அதைக்குறித்து வியவகரிக்கின்றானேயன்றி மற்றல்ல. ஒவ்வொருவஸ்துவிலும் ஓர்தன்மையிருக்க வேண்டுமல்லவா? விசேஷமான அனேகதன்மைகளிருந்திடினும் சாமான்யமாக 'சத்தை' என்பதுவொன்றே. ஆகையால் 'சத்தை' யின் கூட்டுறவாலேயே 'சத்' என்று கூறப்படும். 'சத்தை' யின்சம்பந்தம் இல்லாத வஸ்து 'சத்' என்று எங்ஙனம் கூறுவது? யானுளேன், அவனுளன், கடமுளது, படமுளது என்னும் அனுபவமே அச் 'சத்தை'க்குக் கமக மாகும். இவ்விதம் எல்லாஜனங்களது அனுபவத்தால் அறியப்படும் 'சத்தை' யை இல்லையெனச் சாதிக்கமுயலுதல் அறிஞர் சபையில் முன்னெழுதாததாம். கடபடம்முதலான எல்லாப்பிரபஞ்சங்களும்கற்பிதங்கள் என்பது உசிதமே. அவைகள் 'சத்' ரூபமான ஆன்மப்பொருளில் நாமரூபங்களாய் ஆரோபிக்கப்பட் டிருப்பதால், அதிட்டானமான ஆன்மப்பொருளில் இருக்கும் 'சத்தை' யே ஆரோபிதங்களான கடபடாதிகளிலும் தோன்றுகிறது.

இஃதென்ன புதுமையாய்க் கூறுகின்றீர்களே! 'சத்தை' யுளதென்றும், மற்றகடபடாதிப் பொருள்களெல்லாம் ஆரோபிதங்களென்று உரைப்பது ஒவ்வாதெனில் கூறுவோம். கடபடாதிப்பிரபஞ்சங்கள் 'சத்தை' க்கு அன்யங்களா? 'சத்தை' க்கு அபின்னங்களா? கடபடாதிப்பிரபஞ்சங்கள் 'சத்தை' க்கு அன்யங்களென்றால் அஸத்துக்களாவது பற்றிக் கடபடாதிகள், மலடியின் புத்திரன், முயற்கொம்பு, ஆகாயத்தாமரை முதலியவைகளுக்கு நிகராகும்; நிகராகட்டும் எனில், அஃதனுபவவிரோதமாவதுந் தவிர முயற்கொம்புமுதலியதுகளிடத்து சம்பந்திக்கலாக வியவகரித்தல் அறிவில்லாதவர்களும் பரிட்சிக்கத் தக்கவர்களாவார்கள்.

'சத்தை' க்கு அன்யங்களாயினும் கடபடாதிகள் அச் 'சத்தை' யின் சம்பந்தத்தாலேயே சத்துக்கள் எனவழங்குவதாயிருக்க; நீவிர் கூறும் முயற்கொம்பு முதலானவைகளிடத்து 'சத்தை' யின் சம்பந்தம் பொருந்தாததால் யாம் கூறுவதிற் குற்றமென்ன? 'சத்தை' யின் சம்பந்தத்திற்கு முன் கடபடாதிப்பிரபஞ்சங்கள் அசத்துக்களா?

சத்துக்களா? அசத்துக ளென்றால் அச் 'சத்தை' யானது சாம் யத்தால் முயற்கொம்புமுதலானவைக ளிடத்தில் சம்மந்திக்கலாகும்; தவி ரவும் நம்மவர்களே கடபடாதிப் பிரபஞ்சங்களை அசத்துக்களென்று கூறும்படியாக அது வெறிபிடித்தவர்களது வசனத்துக்கொப்பாகும்; ஆத லின் அசத்துக்கள் என்று கூறுவது ஒவ்வாது. சத்துக்கள்தான் கடபடா திகளென்றால் அதுவும்குற்றமாகும். எனெனில், சத்தையின் சம்பந்தம்பற் றியே 'சத்' எனவழங்கிவரும்பிரபஞ்சங்கள் 'சத்தை' யின் சம்பந்தத்திற்கு முன்னும் 'சத்தை' களாவது எப்படி? குயவனின் தொழிற்படுவதற்கு முன்னமேயே மண்ணைப்பார்த்துக் குடமென்றுகூறுவார்களுண்டா? பிரா ணப்பிரதிஷ்டை செய்யப்படாமலும், சிவலிங்கரூபமாய்ச் செய்யப்படா மலுமிருக்கிற சிலைகளைப்பார்த்து அவைகளைத் தெய்வமென்று தொழுவா ருண்டா? வெல்லங்கலவாத வெறும்தண்ணீரைப் பானகமென் றுரைப் பவருண்டா? அதுபோல 'சத்தை' யின் சம்பந்தத்திற்கு முன்னமும் கட படாதிப்பிரபஞ்சங்களை சத்துக்களென்று உரைப்பவரில்லை.

பிரமவாதிகாள்! சத்தையின் சம்பந்தத்திற்கு முன்னமேயே கடப டாதிபிரபஞ்சங்களில் சத்தாந்தரம் அதாவது வேறுசத்தை இருக்கிறது. ஆனதுபற்றி அசத்துக்களாவதில்லை. சத்துக்களாகிறபடியால் ஏன்சம்மந்த மொவ்வாது? இவ்வாறு யாம்கூறுவதில் குற்றமென்னை? சத்தையின் சம்மந்தத்திற்குமுன்னமிருக்கிறதாக நம்மவர்சத்தாந்தரம் அதாவதுவேறு 'சத்தை' யின் சம்பந்தத்திற்கு முன்னமும்வேறு 'சத்'தாந்தரம் கடபடாதி களில் இருக்கிறதென் றொப்புக்கொள்ளும்படியாக அவ்விதமே முன்ன முன்னமும் வேறு வேறுசத்தாந்தரம் இருக்கிறதென்று கூறுவது अनवस्थादोषः' என்றுகூறப்படும் எல்லையற்ற தோஷமற்று வழங்கும் குற் றத்தை யுடையதாகும். ஆதலால் சத்தாந்தர வாதமுமொவ்வாது.

இனி 'சத்தை' க்கும் கடபடாதி வஸ்துக்களுக்கும் பேதாபேத முள்ளதாவது: கடபடாதி வஸ்துக்கள் 'சத்தை' க்கன்யங்களாயும், அபின் னங்களாயுமிருக்கிறது. ஆனதுபற்றி 'சத்தை' யானது கடபடாதி வியக் திகளிலேயே யடங்காமலும், கடபடாதி வஸ்துக்கள் முயற்கொம்பு முத லியதுகளுக்கு நிகராகாமலுமிருப்பது பற்றி பேதாபேதமுள்ளதென்பது கூறுவதுமல்லவோ வெனில், அதுவும்ஒவ்வாது. ஓ. பேதாபேத வாதிகாள்! நீவிர் பேதாபேதமென்னும் தீங்குழியிலிறங்காதீர். எனெனில், பேதத் தால் கடபடாதிகளுக்கு அசத்துவமும், அதாவது சூன்யகுணமும், அபே தத்தால் சத்தாந்தரவாதமும், அதனால் எல்லையற்ற தென்னும் குற்றமும் போல, ஒன்றுக்கொன்று விரோத மாதல்பற்றி பேதாபேதவாதமும் குற்ற முடையதாகும்.

ஓ பிரமவாதிகாள்! ஈதென்ன நீவிர் கூறுகின்றது புதுமையாகயிருக்கிறது! கடமென்றும் படமென்றும் எல்லோர்களாலும் வழங்கப்படும் கடபடாதிப்பிரபஞ்சங்களைப் பொய்யென்றும்' சத்தை' த் தான் உள்ளதென்றும். இவ்விதங்கூறுவது உலகானுபவ விரோதமன்றோ? அஃதன்று என்றே கூறலாம். ஏனெனில்'சத்'ரூபனும், அபரிச்சின்னனுமிருக்கும் ஆன்மாவினிடத்தில் கடபடாதிகளானஇப்பிரபஞ்சங்கள் மாயையால் கற்பிதங்களேயன்றி மற்றப்படியல்ல. அவ்வதிஷ்டானமான ஆன்மாவினிடத்து இருக்கும் சத்தையே ஆரோபிதங்களான பிரபஞ்சங்களிலும் தோன்றுகிறதென்பதே திண்ணம். கிளிஞ்சல் இடத்து ஆரோபிதமான வெள்ளியிடத்தும் இது வெள்ளியென்னும் வியவகாரத்தில் "इदम्श:" (இது அம்சம்) தோன்றுகிறது போல ஆரோபிதங்களான பிரபஞ்சங்களிடத்தும் ஆத்ம 'சத்தை'யே தோன்றுகிறது ;

"सत्तास्फूर्तिस्सुखंचत्र यमपिजगतांसंगिरन्तेतदंशम् । "

என்ற முன்னோர்களது வசனத்திற்கும்;

" सद्वीदंसर्वं तत्सदितिचिद्वीदंसर्वं काशतेकाशतेच ॥ "

என்ற வேத வசனத்திற்கும் இணங்கியதே இவ்விஷயம். 'சத்தை' என்பது கடபடாதி வஸ்துக்களில் வியவகாரத்துக்கு யோக்கியமாயிருக்கும் தர்மமல்லவா ? அந்தத் தர்மமோ கடபடாதி வஸ்துக்களிராவிடில் நிராச்ரயமாவது பற்றிச் சித்தியாமற் போகுமே. அவ்விதம் சித்திபாவதைப் பற்றி நீங்கள் கூறுவது குற்றமுடையதே என்றால், விசேஷமற்றதாயும் நித்தியமாயுமுள்ள அந்த 'சத்தை'யே ஆன்மாவென்றால் குற்றமென்ன ?

" सदेवसौम्येदमग्रमासीत् । एकमेवाद्वितीयंब्रह्म । "

என்ற வேத வசனங்களும் அவ்வாறே கூறுகின்றன.

'சத்தை' என்பது சத்தின் தர்மமல்லவா ? அதையே பிரமமெனில் அதற்குத்தர்மி எதுவெனில், பரபிரம்மமான ஆன்மாவேதர்மி. அதே தன்னிடத்தில் ஆரோபிதங்களான பிரபஞ்சங்களில் தோன்றுகிறதுபற்றித் தருமரூபமாய் அதாவது 'சத்தை' யென்று வியவகரிக்கின்றோம்;

" सकस्मिन्प्रतिष्ठितः । स्वेमहिम्नि ।"

என்ற வேதவாக்கியங்கட்கிணங்க உண்மையில் ஆத்மா தர்ம, தர்மி பாவமற்றவனே.

கானல் நீரைக்கொண்டு தாகத்தைத் தீர்த்தவனுண்டா வென்றும், பிரபஞ்சங்கள் ஆரோபிதங்கள் அல்லவென்றும் உண்மையே என்று கூறியது குற்றமே. ஏனெனில், சத்தியமானது மூன்றுவிதமானதும்பிராதிகம் ஒன்று, வியவகாரிகம் ஒன்று, மற்றொன்று பாரமார்த்திகம்; இவைகளில் கிளிஞ்சிலைப்பார்த்து வெள்ளி யென்றும், கயிற்றை அரவமே

ன்றும், கானலை நீரென்றும் நினைத்தலே 'பிராதீதிகசத்திய'மென்று கூறப்படும்; ஏனெனில் பார்வைக்கு சத்தியம்போல் தோன்றுகிற படியால்தான். 'வியாவகாரிகசத்திய'மென்றது ஆன்மரூபமாய்ப்பார்க்க வேண்டியபிரபஞ்சங்களை அவ்விதம் பாராமல் கடம் என்றும், படம் என்றும் கிருஷ்ணனென்றும், கோவிந்தனென்றும், இது முதலான அநேகவித நாமரூபங்களாய்ப் பார்க்கப்படுவதே: ஆரோபணமான அத்தியாயத்திற்கு ஏதுவான அவ்வித்தையானது ஆத்ம ஞானத்தால் நீங்க, அப்பொழுது சச்சிதானந்தரூபமாயும்அகண்டமாயும் அனுபவிக்கப்படும் ஆன்மப்பொருளே (சத்) 'பாரமார்த்திக சத்திய' மென்று கூறப்படுவது. கயிற்றிற்றோன்று மரவம் 'பிராதீதிகம்' என்றும், ஆன்மாவினிடத்துத் தோன்றும் பிரபஞ்சங்கள் 'வியாவாரிக' சத்தியமென்றும், ஒன்றுக்கொன்று சுவல்பபேதமேயுள்ளது. கயிற்றிற்றோன்றும் அரவம் கயிற்றின் ஞானத்தாற்றுலைவதுபோல ஆன்மத்தினிடத்திற்றோன்றும் பிரபஞ்சமும் ஆன்மஞானத்தாற்றுலைவது பற்றி பிரபஞ்சம் ஆரோபித மென்கிறோம். கயிற்றிற்றோன்றும் அரவத்தைப்பார்த்துப் பீதியடைவதுபோல் பிரபஞ்ச வியவாகாரமும் வியாவாரகாலத்தில் ஒவ்வுமென்பதில் குற்றமில்லை. யதார்த்த ஞானம் வந்த பிறகு கயிறு அரவம்போற் றோன்றிற்று என்றறிவதுபோல் ஆத்மஞானம் வந்தபிறகு ஆத்மாவேயுள்ளது, அதே மாயைபால் பிரபஞ்ச ரூபமாய்த் தோன்றுகிற தென்றும் அறிவுண்டாதல் பற்றி ஆரோபிதம் பிரபஞ்ச மென்றுகூறுகிறோம். ஆதலின், பிரபஞ்சத்தை மித்தை யென்று வரையும் வேதம் பிரத்யக்ஷப்பிரமாணத்திலுஞ் சிறந்ததோர் பிரமாண மாகும். உயரப்பார்க்கில் ஆகாயத்தின்கண் நீல நிறமும், பிரதேசமும் காணப்படுகின்றதே. அஃதுண்மையா? பிரத்தியக்ஷமே முக்கியப் பிரமாணமானால் அஃதுண்மையேயாகவேண்டும். நம்மவர் கூறியபடி பதார்த்தத்தின் அபாவமான அதாவது ஒன்றுமற்ற ஆகாயத்தின்கண் நீலநிறமும் பிரதேசமும் பிரமத்தினுல் கற்பிதங்களே. ஆகாயம் உருவமற்றது, சப்தமொன்றையே குணமாயுடையது என்றுகூறும் ஆகம ஞானமில்லாமல் நீலநிறமும் பிரதேசமும் பிராந்தியாற் கற்பிதங்களென்று எங்ஙனம் அறியக்கூடும்? முற்கூறிய ஆகம ஞானத்தால் அவைகளைக் கற்பிதங்களென்று உலகில் எவர்களும் அறிகிறுர்களல்லவா? உலகில் எல்லாரும் எக்காலத்திலும் தோன்றுகிற நீலநிறப்பிரதேசங்கள் கற்பிதங்களென்று பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் அறியக் கூடாதாகையாலும் உருவமற்ற ஆகாயத்தின்கண் உருவத்தைச்சாரும் நீலநிறம் பிரதேசமுதலியதுகள் தோன்றுவது ப்ரமம். உண்மையில் கற்பிதங்களே என்ற ஞானத்தாலும், பிரத்யக்ஷத்திற்குத் தோஷஞானம் ஆகம ஞானத்தாலுண்டாகிறதுபற்றி, பிரத்யக்ஷ பிரமாணத்திலும் ஆகமப்பிரமாணம் சிறந்த தென்பதே திண்ணம்.

" तलवद्दृश्यतेव्योम खद्योतोहव्यवाडिव ।
नतलंभिद्यतेव्योम्नि नखद्योतोहुताशनः ।
तस्मात्प्रत्यक्षदृष्टेपि युक्तमर्थपरीक्षितुम् ।
परीक्ष्यज्ञापयन्नर्थं नधर्मात्परिहीयते ।
प्राबल्यमागमस्यैव प्रत्यक्षादिहकीर्त्यते ॥"

என்ற வசனங்களாலும் வேதங்களே முக்கியப்பிரமாணங்களென்று வேதாந்தார்த் தங்களாலும், யுக்திகளாலும், அனுபவங்களாலும்ப்ரபஞ்சங்கள் சச்சிதானந்த ரூபனன பிரம்த்தினிடத்தில் மாயையால் கற்பிதங்களென்பதே.

" अस्तिभातिप्रियंरूपं नामचेत्यंशपञ्चकम् ।
आद्यन्त्रयं ब्रह्मरूपं जगद्रूपंततोद्वयं ॥"

என்ற வசனப்படி உள்ள குண்டலம், விளங்குங்குண்டலம், இச்சிக்கப்படும் குண்டலம் என்ற அனுபவத்தால் சச்சிதானந்தவடிவனுன ஆத்மாவுக்குஅன்ய பதார்த்தமொன்று மில்லை என்பது சித்தாந்தமே.

முற்றிற்று.

கணேச ஆரியர்.

பிரபஞ்ச விநோதங்கள்.

அடியிற்கண்டவைகள் ஒவ்வொன்றும் எல்லாருக்கும் ஓர் அற்புதவிநோதமாயிருக்குமெனக் கருதியே "பிரபஞ்சதாரகை" யிலிருந் தெடுத் தெழுதப்பட்டன.

பாபிலோன் தேசத்துப் புராதனமண்டபம்:—ஒருபுராதன பொருளாயச்சிக்காரன் பாபிலோனில் நேபுகாத்நேச்சாரின் சிம்மாசன மண்டபத்தைக் கண்டுபிடித்தானுய்-அது 60-அடி அகலமும் 160-அடி நீளமுமானது. பிரதானகோயிலுக்கு நேரெதிரே இராஜசிம்மாஸன மிட்டிருந்த வளைவுமாடமிருக்கிறது. அதனிருமருங்கும் மண்டபத்தின் எதிர்பக்கமாகிய வடபக்கத்தில் அலங்காரமாய் வர்ணந்தீர்த்து சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அவை யிதுவரையழிந்துபோகாமலிருக்கிறது : அந்நகரத்தில் கீதங்கள், அகராதிகள் முதலிய எழுதப்பட்ட சுட்டகளிமண் ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

ஓர் விநோத புஸ்தகம்:— 'கிறிஸ்துவின் பாடுகள்' என்ற பெயர்பூண்ட ஒரு விநோதமான புஸ்தகமிருக்கிறது. அதன் அக்ஷரங்களெல்லாம் வெள்ளைக் காகிதத்தில் அத்தனைநேர்த்தியாய் வெட்டப்பட்டு உள்ளுக்குள்ள நீலக்கடுதாசியில் அச்சிடப்பட்டதுபோலவே தோன்றுகிறது. இத்தனை விநோதமான வேலைசெய்து முடிப்பதில் அக்ஷரங்கள் வெட்டுவதற்குக் கற்கள் எவ்வளவு நுணுக்கமா யிருந்திருக்க வேண்டும். பிரயாசம் எவ்வளவு என்பது மிகுந்த ஆச்சரியமா யிருக்கிறது. இப்புத்தகம் 1640-ம் வருஷத்திலேயே புராதனபண்டமாய் விலைக்கப்பட்டது. இப்போது பிரான்சுதேசத்து 'டிலேன்' என்னும் இராஜகுமாரன் வசமிருக்கிறது. இத்தனைவிநோதமாய் நிருமிக்கப்பட்ட புஸ்தகம் வேறொன்றுமில்லை.

அமெரிக்க பிரஜாதிபதியின் அதிவிநோத மேஜை:—தேசக்காரியங்களை விசாரிக்கவென்று அமெரிக்க பிரஜாதிபதி யமரும் மேஜை இங்கிலீஷ் ஜனங்களுக்கு இத

மான சரித்திரவிசேஷமுற்றது. 40-வருஷத்துக்குமுன் சர்ஜான் பிராங்கிலின் என்பவரைத் தேடிப்போன ஒருகப்பலினுத்தரத்தால் அம்மேஜை யுண்டாக்கப் பட்டபடியால் அதனிடம் வந்தவுடன் பிரஜாதிபதிக்கு உத்தரதுருவத்தை யது வீனை ப்பூட்டும். அப்போது சென்ற நாவாய்களில் 'ரெசலூட்' டென்னும் மரக்கலம் உத்தரமகா சமுத்திரத்தில் விடுபட அதை ஐக்கிய மாகாணத்துத் திமிங்கல வேட்டைத்தலைவன் கண்டுபிடித்தான். பிரஜாதிபதியும் அமெரிக்க ஜனங்களும் அக்கப் பலை விலைக்குவாங்கி மராமத்துச்செய்து, அதை இங்கிலாந்தின் ராணிக்கு வெகுமானமாய் அனுப்பினார்கள். அக்கப்பல் பழமையாய்ப் போனபோது காலஞ்சென்ற நம் சக்ரவர்த்தினியின் விருப்பத்தின்படி இதனுத்தரத்தால் ஓர் மேஜை யுண்டாக்கி அச்சம்பவத்தைக் காட்டும் வார்த்தைகளும் அதன்மேல் எழுதப்பட்டு பிரஜாதிபதிக்காக அனுப்பப்பட்டதாம்.

ஆறுவருஷத்திலாறுபுருஷர் படைத்தவினோதம்:—இசபெல்லா காப்பவோரல் என்னும் ஸ்பானிய ஸ்திரீ இப்போது தன்னாறும் கணவனை யிழந்து ஏழாம் புருஷனுக்கு விவாகமாகும் தருணத்திலிருக்கின்றாளாம். 1864-ம் வருஷம் இசபெல்லாவுக்கு 21 வயது. ஸ்பானிய தேசத்தைவிட்டு நியூ ஆர்லியன்ஸ் நகரடைந்தாள்; அவ்விடத்தில் பிரீமான் என்னும் நாடகக்கம்பெனி மானேஜருக்கு விவாகமானாள். இரண்டொருமாதத்தில் ஒருபெரும் பிரயாணத்திலுண்டான மலைச்சுரத்தில் அவன் மடிய, நாடகக்கம்பெனியை நன்கு நடத்தும் நோக்கமாய் ஆட்டக்காரருள் ஹானி யென்பவனைத் தன்னுடவனாகத் தெரிந்து மணம்புரிந்தாள். அன்றிரவில் மணவறை பிணவறையாயிற்று. ஓர் சச்சரவில் மந்தியஸ்தஞ் செய்யப்போய் அவ்வேழை ஹானி கத்தியால் குத்துண்டிறந்தான். இதற்கு மூன்று வாரத்துக்குப்பின் ஆட்டக்காரரில் வேறொருவனுக்கு மனைவியானாள். லோபஸ் என்பதுஅவன்பேர். அவன்மெக்ஸிகோ தேசத்தான். தேசசட்டத்தை மீறினனென்று பிடிபட்டு ரெயில்மார்க்கமாய்க் கொண்டுபோகும்போது வண்டியிலிருந்து தப்பவெண்ணி தரையிற் குதித்து மாளவே, ஏழை இசபெல்லா ஈராறுமாதத்தில் மும்முறை விதவையானாள். நாலாம் பதியுகமகப்பட்டான். நைட்டென்னும் அமெரிக்க இராணுவ உத்தியோகஸ்தனாகிய அவன் கியூபாவி லுண்டான சமரில் அகாலமரணமடைந்தான். ஐந்தாம்புருஷன் ஒரு உபயோகமற்ற பொருள் வியாபாரி; ஒரு உத்தரம் விழுந்து அவன் மாண்டான்; 6-ம் புருஷனைப்பற்றிய விவர மதிகந்தெரியாது; ஆனால் அவன் புகைப்படகில் அகஸ்மாத்தாய் மரணமடைந்தான். அவளின்னம் இளமையும் கையில் கொஞ்சம் சொத்துமுள்ளவளா யிருக்கின்றதால் சார்லஸ்டன் வர்த்தகன் ஒருவன் விவாகஞ்செய்வேன் என்று அவளைத் துணிவுடன் கேட்டிருக்கிறான்.

உலகத்தில் நீண்டபாலம்.—உலகத்திலுள்ள எல்லாபாலங்களுக்கும் அதிகநீளமானது சீனாவில் ஸாங்காங் என்னும் இடத்துக் கருகிலுள்ள சிங்கபாலம் என்றுசொல்லப்படுகிறதுதான். இது மஞ்சள் கடலின் ஒருபாகத்தில் $5\frac{1}{2}$ மையிலில் கட்டப்பட்டிருக்கிறது. வலுத்த பிரமாண்டமான 300, கற்றூண்கள் இதற்கு ஆதாரமாக நிறுத்தப்பட்டு 300, கண்கள் உடையனவா யிருக்கிறதாம். பாலத்தின்மேல் இரும்பு கம்பிகளால் பின்னப்பட்டு 70 அடி அகலத்துக்கு நடைபாதை போட்டிருக்கிறதாம். பாலத்தைத் தாங்கும் ஒவ்வொரு தூண்கள்பேரிலும் 21 அடி நீளமுள்ள ஒவ்வொரு வெள்ளைக்கல் சிங்கங்கள் தைக்கப்பட்டிருக்கிறது, கீந்தாங் என்கிற சீன சக்கிரவர்த்தியின் காலத்தில் இந்தப்பாலம் கட்டப்பட்டதாம்.

ஓர் பூர்வீகமான செங்கல்:—உலகத்தில் நாகரீகந்தோன்றுவதற்கு முன்னமே செங்கல் அறுக்கும்வித்தை மனுஷருக்குத் தெரிந்திருந்ததென்று சொல்லக் கூடியதாயிருக்கிறது. இப்பொழுது பிரான்சு M. ஹென்ஜி என்பவர்வசத்தில் ஓர் பூர்வீக செங்கல் இருக்கிறது. அது உருவத்தில் சற்றுவளைவாயிருக்கிறது. ஆனாலும் கட்டத்தில் அழுத்தப்படவில்லையென்று காணப்படுகிறது. இதைச் செய்தவனின் பெருவிரல் அடையாளம் அதன்மேல் காணப்படுகிறது. அது சில்தேயாவிலுள்ள தல்லோ" என்றழைக்கப்படுகிற பூர்வீக சிர்ப்புல்லா என்னுமிடத்தில்

சார்செக் என்னும் பூதத்துவ சாஸ்திரியாரால் தோண்டி யெடுக்கப்பட்டது. அக்கல் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கலாம் என்று உத்தேசிக்கப்படுகிறது. அப்படியானால் அதை ஓர் பூர்வீகவினோத மென்று சொல்லலாமல்லவா ?

வினோத பீரங்கிகள்:—பரோடாவின் கைக்வார் அரசனிடத்தில் 2-பொன்பீரங்கிகளும் 2-வெள்ளி பீரங்கிகளும் இருக்கின்றனவாம். பொன்பீரங்கிகள் 1874ல் லக்கா என்னும் சிற்பியால் செயப்பட்டனவாம்; இவைகளைச்செய்ய 5 வருஷம் சென்றனவாம். அவைகள் ஒவ்வொன்றும் 400 பவுன் நிறையுள்ளதாம். உள்பக்கத்தில் மாத்திரம் எஃகு நுழைக்கப் பட்டிருக்கிறதாம். இவைகள் சித்திரவேலை செய்யப்பட்ட மரத்தின்மேல் வெள்ளியால் மூடப்பட்ட பீரங்கிவண்டியின்மேல் வைக்கப் பட்டிருககின்றனவாம்; 1876ல் நமது இராஜசக்ரவர்த்தி இந்தியாவுக்கு வந்தபோது அவரைசந்திக்க பரோடா அரசன்பம்பாய்க்குப்போனபோது அவருக்குவந்தனமாகவெடிதீர்க்கத்தமுடன்ஷெ பொன் பீரங்கிகளைக்கொண்டுபோனாராம்;மற்றொருபோதும் அவைகளைப் பரோடாவைவிட்டு வெளியே கொண்டுபோகவில்லை.

மிகவும் பெரிய ஆகாயக் கப்பல்:—பர்லின்பட்டணத்தில் இதுவரைக்கும் உலகத்தில் செய்யப்பட்ட பலூன்களைவிட பெரிய பலூன் ஒன்று செய்திருக்கிறார்கள். அது 320,000 கன அடி விஸ்தீரணமுள்ளதாம். அது 90டன் பாரத்தைத் தூக்கிக்கொண்டு போகக்கூடியதாம். பிரயாணிகளுக்கு வேண்டிய போஜன பதார்த்தங்களிருப்பதுடன் அவர்கள் தூங்குவதற்கு வேண்டிய இடவிசாலமும் அதில் உண்டு; ஒருபலூன் ஆகாயத்தில் எவ்வளவு நேரமிருக்கக் கூடுமென்று தீர்மானிக்கவும் அநேகசாஸ்திர ஆராய்ச்சிகள் செய்யவும் நோக்கமாய் இதைச் செய்திருக்கிறார்கள்.

சதையிலே வண்டு:—இங்கிலாந்திலே ஒருபெண்ணை ஒரு பூச்சி கடித்ததாம். அதனால் நோவும் வீக்கமும் அதிகரித்து அவள் உதிரத்தில் விஷம்ஏறினதாகச்சந்தேகித்து, காயத்தை ஆழமாய் அறுத்துச் சோதித்தபொழுது, அதிலே உயிருள்ள வண்டொன்று இருக்கக் கண்டார்கள். அந்த வண்டு சதைக்குள்ளே நுழைந்தது எப்படி என்பது ஒரு கேள்வி. மேற்படி பூச்சி கொடுக்கால் கொட்டினபொழுது அதன் சிறு முட்டை ஒன்று சதையிலிரங்கிப் பின்பு இப்பெண்ணின் தேகஉஷ்ணத்தினால் பொரித்து வண்டுக்குஞ்சு ஒன்று வெளிப்பட்டுச்சதையில் வளர்ந்து. அப்பெண்ணுக்குப் பொறுக்க மாட்டாத உபத்திரவத்தை உண்டுபண்ணினதென்று காயத்தைப் பரிட்சித்த வைத்தியர் சொல்லுகிறார்.

பிரபஞ்சத்தில் சிறிதான கடியாரம்:—மிக்க சிறிதான கடியாரம் ஒன்றுண்டு. அதின் அகலம் ½-அங்குலம். கனம் 9-அங்குலம். அதிலே 95 உறுப்புகளுண்டு.ஒருநாளைக்கு அதிகமாய் ஓடும். ஆனால் அதின்விலை ஏறக்குறைய 4,000 ரூ.

கண்ணாடி வெட்டும் விநோதம்:—காகித அட்டையைச் சுலபமாய் கத்தரிக்கோலால் வெட்டும் வகையை ஒருவர் கண்டுபிடித்திக்கிறார். வெட்டும்போது கண்ணாடியையும், கையையும், கத்தரிக்கோலையும் தண்ணீர்க்குள் வைத்துக்கொள்ள வேண்டுமாம்.

பிரபஞ்சத்தில் மகா பெரிய இலைகள்:—உலகத்தின் பெருந்தீவாகிய அமெஸான் கரையோரத்தில் விளைகிற இராஜ் என்னும் பனையின் ஓலைகளே! அவ்வளவு பெரிதான இலைகள் உளகத்தில் எங்கும் இல்லையாம், அவற்றின் நீளம்50-அடியும், அகலம் 12அடியுமாம். ஒரு இலையே கூரையாயிருக்கலாம்-

லண்டன் கீழ் ஏரி:-லண்டன் பட்டணத்துக்கு நூறு அடிக்குக் கீழே ஈராயித்து ஐந்நூறுமையில் விஸ்தீரணம் கொண்ட சுண்ணாம்புத் தரையுள்ள ஒரு பிரம்மாண்டமான ஏரி இருப்பதாகத் தெரியவருகிறது. நூறு அடி நீளமான குழாய்களைக் கொண்டு அவ்வேரியின் ஜலத்தை லண்டன் நகரத்தார் உபயோகித்துக் கொள்ளலாமென்றஒரு எஞ்சினியர் சொல்லுகிறார்.

ஸ்பேயினில் ஓர் புதுமை:—ஸ்பெயின்தேசத்தில் ஒரு பத்திரிகைக்காரன் தன் பேபரைக் காடுதாசியில் அச்சிடாமல் மெல்லிய ஒரு வெள்ளைத்துணியிலே ஜலத்தில் லேசாய்க் கரைந்துபோகும் ஓர்வித மையினால் அச்சிட்டுவிடுகிறான். அதை வாங்கிப் படித்தபின்பு அதை ஜலத்திலிட்ட உடனே எழுத்தெல்லாம் போய் அது ஒரு நல்ல குட்டையாய் மாறிவிடுகிறது.

பூர்வீக பான்க்நோட்டுகள்:—இங்கிலாந்தின் பாங்கியில் 1694-ல் தான் முதல் முதல் பான்க் நோட்டுகள் வழங்கப்பட்டது. இதற்கு 300 வருஷங்களுக்குமுந்தியே சீனாவில் பான்க்கு நோட்டுகள் வழங்கப்பட்டனவாம். சீனசக்ரவர்த்தியாகியஹங்வூ அரசாண்ட 1388–99-வருஷத்தில் பிரசுரம் செய்யப்பட்ட ஒரு பூர்வீகமான பான்க்நோட்டு இப்போது பிரிட்டிஷ் மியூஜியம் என்னப்பட்ட பலபொருள் காக்ஷி சாலையில் ஒருகண்ணாடிபெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

பிரபஞ்சத்தில் வரண்ட பூமி:—தென் அமெரிக்காவில் ஒரு தேசத்தில் "பைற்ரு" என்றோ ரிடமுள்ளது. இது நிரக்ஷரேகைக்கு 5-பாகை தெற்க்காயிருக்கிறது. இந்த இடமே உலகத்தில் மிகவும் வறண்டநிலம் என்று கருதப்படுகிறது. இங்கே சராசரி இரண்டு வருஷத்துக்கு ஒருமுறைதான் சிறு தூரலாக மழை பெய்யுமாம். இந்த வெப்பமும், வறண்டதுமான பூமியில் 7-வகை பூண்டுகளிருக்கின்றனவாம். சுதேசிகள் ஓர்வகை பருத்திச்செடியைப் பரிபாலித்து ஜீவிக்கிறார்கள்.

பூர்வீகவினோத புஸ்தகசாலை (Library)—நிப்பூர்நகரத்தின் தேவஸ்தலத்தைச் சேர்ந்த புஸ்தகசாலை இப்பொழுது பூமிக்குள்ளிருந்து வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பதினேழாயிரம் பூர்வீக சாஸனங்களிருக்கின்றனவாம். இவைகள் (2280 கி. மு.) வருஷத்திற்கு முந்திய சரித்திர சம்பந்தமான காரியங்களைத் தெரிவிக்கின்றனவாம். இப்போது கண்டுபிடிக்கப்பட்டது அப்புத்தகசாலையின் ஓர் சிறியபாகமாம். முழுவதையும் வெட்டி எடுக்க 5 வருஷம் செல்லுமாம்.

ஏமாற்றும் வார்த்தைகள்.

(சிறுவர்கட்கு)

மீனாட்சி:—பள்ளியிலிருந்துவந்த தன்புத்திரனைநோக்கி, "அடநாராயணா! இப்போது மணி ஆறு; ஆகிறதே, உன்னுடைய பள்ளிக்கூடம் 4-மணிக்கே கலைகிறதல்லவா? இன்னேரமெங்கு சென்றனை? என்றாள்.

நாராயணன்:—"அம்மா! நாங்கள் பந்துவிளையாடிக்கொண்டிருக்கும்போது காலஞ் சென்றதுகூடத் தெரியவில்லை; காலஞ்சென்றதைப்பற்றியாவது வீட்டிற்கு வரவேண்டுமென்றாவது நினைத்தோமில்லை" என்றான்.

நாராயணன்:—தான் சொன்ன வார்த்தையைக்கொண்டுதன் தாயாரை ஏமாற்றிவிட்டான். எப்படியெனில், தன் புத்திரன் மற்றப் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண் டிருக்கலாமென மீனாட்சி நம்பினாள். ஆனால் நாராயணன் விளையாடவேயில்லை. இவன் பள்ளியில் சரியானபடி பாடம் ஒப்பிவிக்காத குற்றத்திற்காக உபாத்தியாயர் இவனை அஸ்தமிக்கும்வரையிலிருந்து தன் பாடங்களை வாசிக்கச் செய்தார்; நாராயணனுக்கு இந்த உண்மையைத் தன் தாயாரிடம் சொல்ல மனமில்லை. தான் விளையாடிக்கொண்டிருந்ததாகவே தன் அன்னை நினைத்துக்கொள்ளவேண்டுமென்பதே அவனுடைய எண்ணம். நாராயணன் போஜனத்துக்கு உட்காரும்போது தனக்குத்தானே அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. "என்ன அவமானமிது? உன் தாயாரை ஏமாற்றுவது பாவமல்லவா?" என்று ஏதோ தன் மனதிற்குள் சொன்னதாக அவனுக்குக் காணப்பட்டது. ஆயினும், பையன் தனக்குள்ளேயே நிமித்தமில்லை! நிமித்தமில்லை!! நான் பொய் சொல்லவில்லையே என்று முணகிக்கொண்டிருந்தான்.

"ஆனல் நீ உபயோகித்த வார்த்தையானது நீ விளையாடிக்கொண்டிருந்ததாக உன் தாயை நம்பச்செய்தது; இருந்தாலும், நீயே அந்தமாதிரி சொன்னதுபோலவே

தான்;" என்று அவன் மனதிற்குள் ஏதோ சொன்னதுபோல் மறுபடியும் காணப்பட்டது. "நான் பொய் சொல்லவில்லையே," என்றான் நாராயணன்.

ஏ சிறுவர்களே ! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ? நாராயணன் பொய்சொன்னானா ? இல்லையா ? அவன் பொய்சொன்னதாகவே நீங்கள் சொல்வீர்கள் என்றே நிச்சயிக்கிறேன். ஒருவனை ஏமாற்றி மோசம்பண்ணவேண்டுமென்று நாம் சொல்லும் வார்த்தைகள் பொய்யான வார்த்தைகளே. நாராயணன் கெடுதலான பொய்யைச் சொன்னதானது உண்மையைப்போலவே காணப்பட்டது. உண்மையைப் போல் காணப்பட்டுப் பிறரை நம்பச்செய்யும் பொய்யே அதிக கெடுதலான பொய்.

இப்பொழுது பற்பல பிரபுக்களிடம் மேற்சொன்னபடி சமயத்துக்குத் தக்க வார்த்தைகளைக் கொண்டு மயக்கி, ஏமாற்றிக்கொண்டே முடிவில் அவர்கள் பொருளைக் கணக்குவழக்கில்லாமல் கவர்ந்து படுமோசம் செய்யும் கள்ளர்கள் அநேகரிருக்கிறார்கள். சாதாரணமாய்ப் பகுத்தறிவில்லாமல் உலகநடை நன்கு யறியாத அன்னோர்கள் மேற்சொன்ன நாராயணனைப்போன்றவர்களுடைய நிஜம்போன்ற பொய்மொழிகளை நம்பியேமோசம்போகிறார்கள். ஆகையால் பிரபுக்கள் உலகினர்களைக் கலந்துக் கூசாமல் பேசியே எல்லா விஷயங்களையும் பயின்று தாம் மோசம்போகா வண்ணம் உலக நடைகளை நன்குணரவேண்டும்.

GENERAL NEWS.
சமாசாரக் குறிப்புக்கள்.

பஞ்சாப்பில் ஸ்திரீகளுக்காக ஓர்காலேஜ் மேமாதமுதல் பஞ்சாப் கெவர்ன்மெண்டாரின் உதவியால் திறக்கப்படப் போவதாய் மெயில் பத்திரிகை கூறுகிறது. அதை மிகவும் அழகாய்க் கட்டுவார்களாம். அதில் க்ளாஸ் ரூம்களும் (class rooms) லைபெரெரிகளும் (Library), படுக்கையறைகளும் (Bed rooms) விநோதமாய் அமைக்கப்படுமாம். (அதற்கு செண்ட் பீட்ஸ் காலேஜ்) என்று பெயர் கொடுக்கப்படுமாம். அதில் சர்வகலாசங்கப் பரீக்ஷைகளுக்கு வாசிக்கும் பெண்களுக்கு வகுப்புக்களை ஏற்படுத்துவார்களாம்.

இந்தியாவில் ப்ளேக் வியாபித்துச் சுமார் ஏழுவருஷங்களாயின. அந்த வியாதிக்கு மாறுங்காலம் வரவில்லை. 1896-ௗ முதல் இதுவரையில் மேற்கண்ட வியாதியினால் மாண்டவர்கள் கணக்குக்குவந்த மட்டில் 1,500,000. தெரிந்துந் தெரியாமல் மாண்டவர்கள் அரைமெலியன் அதாவது 500,000. ஆகக்கூடி பிளேகினால் நமனுலகடைந்தவர்கள் இரண்டு மெலியனிருக்குமாம். இந்தியா முழுவதிலும் வாரந்தோறும் 30,000. பேர்கள் ப்ளேக்கில் மடிவதாகத் தெரியவருகிறது. இப்பொழுது அது மலினமடையுமென்று நாம் நினைப்பதற்கில்லை. ஆகலின் ஜனங்கள் நல்ல காற்றுடைவாயுள்ள இடங்களில்படுத்தும், சுகாதார விதிகளை யுணர்ந்து நடந்துவருமாறு எச்சரிக்கின்றோம்.

பிராயாணிகள் ப்ளேக் பிரதேசத்திலிருந்து வருகிறார்கள் என்பதை எளிதில் தெரிந்துகொள்ள பிரயாணிகட்களிக்கும் சீட்டுகளில் ஓர்வித அடையாளஞ் செய்யவேண்டுமென இராஜாங்கத்தார்கள் இரயில் அதிகாரிகளுக்கு உத்தரவளித்திருக்கிறார்களாம்.

சென்ற பங்குனிமாதம் 24ம் தேதி திங்கட்கிழமை ஸ்ரீராமநவமி அன்றுஇரவில் ..ள்ளூர் பிரமஸ்ரீ மகாதேவ சாஸ்திரிகள் பாகவதராய் ஏற்பட்டு துறையூர் அன்ன..த்திரத்தில் செய்த காலக்ஷேபம் புகழத்தக்கதே. அவர் உபந்யசித்தகாதை ஸ்ரீராம ஜனனம் ; கேட்குனர் எலும்புகள் நெக்குநெக்காயுருகி சித்திரப்பாவைகளைப்போல் அசைவற்றிருந்து கேட்கும் வண்ணம் அவர் நேர்த்தியாய்க் கதைசொன்னார். தம் மாலியற்றியுள்ள சமயோசிதமான கீர்வாண கானங்களையும் இடையிடையே கூறிய விசித்திரங்களையும், சுலோகங்களின் அர்த்தங்களையும், இன்னும்வடமொழி இராமாயணம், சம்பு இராமாயணம், அத்யாத்மிகராமாயணம், காளிதாஸ இராமாயணம்,முத

லிய கிரந்தங்களை அனுசரித்துப் புதுமாதிரியாய், ரோமபத மகாராஜன் விபண்டக சுதரான இருஷ்யசிருங்கரை வாராங்கனைகளால் மயக்கித் தன்நகரத்திற் கழைத்து வந்து, தான்தன் மித்திரரான தசரத மகாராஜனிடம் ஸ்வீகரித்த சுதையான சாந்தை என்னும் பெண்மணியை அவருக்குக் கன்னிகாதானமாய்க் கொடுத்ததுமுதலாயுள்ள சரித்திரங்களை, நவரஸாலங்காரங்களுடனும், பக்திவெள்ளம் பெருகப்பிரசங்கித்து எல்லாரையும் களிக்கச் செய்தனர். அவர் நூதனபாகவதாராயினும், இனிவரவரத்தேர்ச்சிபெற்று இந்தஜில்லாவுக்கே நாயகம்போல் விளங்குவார் என்பது திண்ணம். அவருக்குச் சென்னையிலும் காலக்ஷேபஞ்செய்ய விருப்பமுளது. அவ்விருப்பத்தைச் சீக்கிரம் கடவுள் நிறைவேற்றுவாராக. ஆனால் கதாப்ரசங்கஞ் செய்துகொண்டிருக்கும்போது உயரத்தொங்கிக்கொண்டிருந்த 'பவர்' விளக்கு திடீரென்று கீழே விழுந்தது. சேதம் ஒன்றுமில்லை. ஏதோ துற்குறியை முந்தியே தெரிவிக்கிறதுபோலும்.

தஞ்சை ஜில்லா கலெக்டர், கும்பகோணத்தில் ஸர். சேஷய்யசாஸ்திரியார் அவர்களின் கிரகத்துக்குவந்து லார்டு அண்டு ஹில்லுடைய உத்தரவின்படி அம்மகானுக்கு K. C. S. I., பட்டம் கொடுத்தனர் என்பதைக்கேட்டுக் களிக்கின்றனம். அப்பட்டத்தை வகித்துக்கொண்டு சாஸ்திரியார் நீண்டகாலம் ஜீவிப்பார் என்றுநம்பியிருப்பதாய் கலெக்டர் மொழிய, சாஸ்திரியார் அவர்களும் தமக்கப்பட்டத்தையளித்தவர்கட்கு நன்றி செலுத்தியது மன்னியில், நமதுவழாவது எட்வர்டு அரசர் நீடூழி வாழ வேண்டுமென்னும் தமது விருப்பத்தைக் காட்டினராம்.

சென்றபங்குனி-மீ 14-வ வெள்ளிக்கிழமை காலைநேரத்தில் கொளும்புச் சமீபத்துக்குவந்த 'சீம்' என்கிற ஸ்டீமரின் முதல்வகுப்பி விருந்த ஒருவாலிபஐரோப்பியபெண் முந்தின நாள் இரவு சுமார் 10-மணிக்கு கிராதியின்பேரிலேறி கடலில் குதித்தனளாம். இவளுக்கு சுமார் 22-23 பிராயம் என்கிறார்கள். நல்ல சுகசரீரத்துடனிருந்தவள். தற்கொலை செய்துகொள்ள யாதொருகாரணமும் காணப்படவில்லை. இவள் கடலில் விழுந்ததை தூரத்திலிருந்து பார்த்த இக்கப்பல் உத்தியோகஸ்தன், உடனே கப்பலை நிறுத்திப் படகைவிட்டு அப்பெண்ணைத்தேடியதில் அவள் அகப்படவில்லை என்று பத்திரிகைகள் கூறுகின்றன. இளம்பிராயமுள்ள ஓர் பெண்ணுக்கிருந்த மனோதைரியத்தைப் பாருங்கள்.

கலியின் கொடுமை :—தெய்வமொன்றுளதென்பதைச் சுத்தமாய் மறந்து சிலர் பௌருஷமான மொழிகளைப்பகன்றுக் காலத்தை வீணேகழிக்கின்றனர். "தைவமேவ பரம் மன்யே பௌருஷந்து நிரர்த்தகம்" என்றல்லவோ ஸ்ரீராமர் இளைய பெருமாளை நோக்கிக்கூறியுள்ளார். இடம், பொருள், ஏவலாதிகளைக் கொண்ட சிலர், அவைகளைச் சதமெனக்கருதி வீண் கர்வங்கொண்டு தமக்கெளியோரை எளிதில் வஞ்சிக்கிறார்கள். தம் மனைவி, மக்கள், சகோதரர், சுற்றத்தார் என்றும் பாராமல், தமக்கெளியோரெவராயினும், அவர்களை வஞ்சிப்பது கலியின் கொடுமையேயாம். இதில் அநேக வேறுபாடுகளுள. அவைகளை விரிவஞ்சி விடுத்தாலும், ஒன்றுமாத்திரம் சொல்லாமற்றீரவில்லை. ஓர் வீட்டிற்கு மருமகனாக வருமொருவர், மானிகளும், எளியவர்களுமான மாமி மாமன்மார்கட்கு முற்றும் விரோதமும், அசத்யமுமான வழியில் நடந்து பேமானிகளாய் ஊர்சிரிக்கச்செய்தும், நிரபராதியும், பேதையும், மானியும், குணவதியுமான அக்னிசாட்சியாய்க் கைபிடித்த ஓர் கன்னியைப் படாதபாடும் படுத்தி வயிற்றிலடிக்கிறார்களே! அந்தோ ! ! மேற் கூறியவர்கள் "எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வம் நின்று கொல்லும்" என்னும் நீதிவாக்கியத்தை எண்ணாது முற்றும் துறந்து அநீதியிலேயே தம் மனதைச்செல்லவிடுத்து பழிபாவங்களை வலுவில் மூட்டைகட்டுகிறார்கள். அத்தகையோரும் மற்றுமுள்ள சிறுவர் சிறுமிகளும் "ஓர் நீதிக்கதை" என்று நம்மால் பிரசுரமாகும் புத்தகத்தை வாசித்தால் இதுவும் நன்மார்க்கத்திற்கோர் உதாரணமெனக் கொள்வார்களென்பதில் ஐயமில்லை. அது ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கக்கருதியே "காலணா" விலையில் ஓர் சிறு புத்தகமாக சீக்கிரம் வெளியாகும். வேண்டியவர்கள் சுதண சுந்தரம் ஆபீசுக்கும் தாம்ஸன் கம்பெனியாருக்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சரிகை தொப்பிகள்.

நெ. 50. வில்வெட் தொப்பியில் மேல் புரத்திலும் பக்கத்திலும் வெள்ளிசரிகையினால்பூபோட்டது. 1-க்கு ரூ. ...14-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 2-8-0.

நெ. 51. வில்வெட் தொப்பியில் ஒருபக்கத்தில்மாத்திரம் வெள்ளிசரிகையினால் இராணி முடி போட்டது 1-க்கு ரூ. ... 3-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 1-4-0.

நெ. 52. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினால்மேல்புரத்திலும் ஒருபக்கத்தில் புஷ்பச்செடி போட்டது 1-க்கு ரூ. ... 4-8-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 1-8-0.

நெ. 53. வில்வெட் தொப்பியில் மேல்புரத்திலும் பசகத்திலும் வெள்ளிசரிகையினால் அழகான பூ போட்டது 1-க்கு ரூ. ... 9-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 2-0-0.

நெ. 54. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினால் மேல் புரத்தில் தாம்பிரகமலமும் பக்கத்தில் முழுமையும்,கிளி,செடி முதலிய அழகான பூபோட்டது 1-க்கு. ரூ ...12-8-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-8-0.

நெ. 55. வில்வெட் தொப்பியில் வெள்ளி சரிகையினால் மேல் புரத்திலும் பக்கத்திலும் விசித்திரமான பூ வேலை செய்தது 1-க்கு ரூபாய் ...15-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-0-0.

நெ. 56. வில்வெட் தொப்பியில் வெள்ளிசரிகையினால் மேல்புரத்தில் தாம்பிரகமலமும்,பக்கத்தில் மாங்காய்போல் பூ போட்டது 1-க்கு ரூ. ...10-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 3-0-0.

நெ. 57. வில்வெட் தொப்பியில் வெள்ளிசரிகையினால் மேல்புரத்திலும், பக்கத்திலும் போகர வேலை செய்தது அதிக நாணயமானது 1-க்கு ரூ. ...27-0-0.

ஷை ஜர்மன்வெள்ளி 1-க்கு ரூ. 4-0-0.

சடைத் தலைப்பாகை. (டர்பன்)

நெ. 58. சில்க் என்னும் உயர்ந்த பட்டில் வெள்ளி சரிகைபோட்ட தலைப்பாகை 1-க்கு ரூ. ... 5-8-0.

ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 4-8-0.

நெ. 59. வெள்ளிசரிகை கோடுகள் போட்ட கொட்டடிதலைப்பாகை 1-க்கு ரூ. ... 6-8-0.

ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 5-8-0.

நெ. 60. வெள்ளி சரிகையினால் பூபோட்ட காசி தலைப்பாகை முழுமையும பூபோட்டது 1-க்கு ரூபாய். ... 8-8-0.

ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 7-8-0.

நெ. 61. வெள்ளிசரிகையில்கோடுகள்போட்டதும் கோட்டுக்கு மத்தியில் பூபோட்ட காசி தலைப்பாகை அதிக நாணயமானது 1-க்கு ரூபாய் ...10-0-0.

ஷை இரண்டாந்தரம்1-க்கு ரூ. 9-0-0.

மேற்செல்லிய தலைப்பாகைகளில் ஒவ்வொரு தினுசுகளும் மைசூர் தலைப்பாகை மாதிரி கட்டி அனுப்ப வேண்டுமானால் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 - அதிகமாகும். ஒவ்வொன்றுக்கும் வி. பி. சார்ஜ் போஸ்டேஜ், பாக்கிங்கு சார்ஜ். ரூ-2. அதிகமாகும். ஒரேதடைவையில் ஒரேதினுசில் மூன்றுவாங்கினால் போஸ்டேஜ் சார்ஜில் பாதிதள்ளிக் கொடுக்கப்படும்.

☞ மேற்படி தொப்பிகளும், தலைப்பாகைகளும் வேண்டுமானால் பாதிபணத்தை முந்தி மணியார்டர் அனுப்பவேண்டியது. மற்றபணத்திற்கு வி. பி. மூலமாக அனுப்புவோம் இன்னும் அவரவர்களுக்கு வேண்டிய சாமான்களும் அனுப்புவோம். காட்லாக்வேண்டியவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பவேண்டியது. ஆர்டர் அனுப்புகிறவர்கள் தலையின் அளவு எடுத்து அனுப்பவேண்டியது. ஒரே தடவையில் ஒரே தினுசில் மூன்று தொப்பி வாங்கினால் போஸ்டேஜ் சார்ஜில்லாமல் அனுப்புவோம்.

கௌரி அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை போஸ்டு
சென்னை.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

NOTICE TO OUR SUBSCRIBERS.

As the *Suguna Sundaram* completes its first year with the April issue, it will enter upon the second year of its existence from the May issue. It is hoped, that all our Subscribers will not only continue their patronage but, will further encourage the wide circulation of the Journal. Subscribers are earnestly requested to remit their Subscriptions in advance, before the 30th June, at the favourable rates of Rs. 2-8-0. All subscriptions that remain unpaid after that date will be collected at the usual rate of Rs. 3-1-0 by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

நமது சுகுணசுந்தரப் பத்திரிகைக்கு நாளது வருஷம் ஏப்ரல்மாதத்துடன் முதல் வருஷம் முடிவுபெற்று, மேமாதம் துவக்கி இரண்டாவது வருஷம் ஆரம்பமாகிறது. நமது சந்தாதாரர்கள் இந்த முதல் வருஷத்தில் ஆதரித்து வந்தபடியே அந்த வருஷமும் இதை ஆதரித்து வருவதோடுகூட இப்பத்திரிகை முன்னுக்கு வருமாறு தக்க முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது. சந்தாதாரர்கள் தங்களுடைய அடுத்த வருஷத்திய சந்தாவை முன்னாடியே ஜூன்மாதம் 30-ம் தேதிக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முன்னாடி சந்தா செலுத்தாத ஏனையோர்கள் அந்தத் தேதிக்குப் பிறகு ரூ. 3—1—0 வீதம் வி. பி. தபால் மூலமாய் செலுத்தி நாம் அனுப்பும் பத்திரிகையைப் பெற்று ஆதரிக்க நேரிடுமென்பதை இதன் மூலமாய்த் தெரிவித்துக் கொள்ளலாயிற்று.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

மானேஜர்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office,
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்கும் சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.

ADVERTISEMENTS : Favourable Rates —Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 50. English advertisements at As. 6 per line. For other details apply to the Managing Proprietor, "Suguna Sundaram" Office, Turaiyur, Musiri Taluk.